செந்தமிழறிஞர்கள் 108

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

மயிலை சிவமுத்து






NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

ISBN : 978-81-686100-1-9

https://www.annacentenarylibrary.org/pages/view/67.%20%E0%AE%AE%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%88%20%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81_1892

செந்தமிழ்சிற்பிகள்

மயிலை சிவமுத்து (1892-1968)



அறிமுகம்

மயிலை சிவ. முத்து என்னும் மயிலாப்பூர் சிவானந்த முத்துக்குமாரசாமி இசைப்பாடகர், தமிழ்நெறிக் காவலர், பேராசிரியர், மாணவர் மன்றத் தலைவர், சமூகத் தொண்டர், எழுத்தாளர், குழந்தைக் கவிஞர், இதழாளர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர்.

மயிலை சிவ. முத்து 1892ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15ஆம் நாள் சென்னை மயிலாப்பூரில் வாழ்ந்த சிவானந்தர் - விசாலாட்சி இணையருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார்.

இவர் மயிலாப்பூரில் ஏழாம் வகுப்பு வரை பயின்றார். குடும்பச் சூழ்நிலை காரணமாக அக்கல்வி தடைபட்டது. பின்னர் 1904 ஆம் ஆண்டில் எழுப்பூரில் உள்ள சென்னை கைவினைக் கல்லூரியில் (தற்பொழுது கவின்கலைக் கல்லூரி, சென்னை) ஓவியம் கற்றச் சென்றார். தந்தையின் மறைவின் காரணமாக அக்கல்வியும்

தடைபட்டது. சென்னை உயர் நீதிமன்ற அச்சகத்தில் அச்சுக் கோக்கும் பணியில் சேர்ந்தார். ஒழிந்த நேரத்தில் சிறு சிறு நூல்களைப் படித்துத் தன்னுடைய தமிழ் அறிவையும் ஆங்கில அறிவையும் வளர்த்துக்கொண்டார்.

தமிழ் மற்றும் சமுதாயப் பணி

இவர் இசைப் பாடகராக இருந்ததால் சென்னை சிவனடியார் திருக்கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார். அக்கூட்டத்தால் நிறுவப்பட்ட பால சைவ சபையில் சொற்பொழிவாற்றப் பழகினார். அங்கே தமிழறிஞர்களான ஆதிமூலம், மணி.திருநாவுக்கரசர் ஆகியவர்களின் நட்பைப் பெற்றார்.

திருநாவுக்கரசரிடம் தமிழ் பயின்று புலவர் தேர்வில் வெற்றி பெற்றார். இதனால் உயர் நீதிமன்ற அச்சகப் பணியிலிருந்து 1912ஆம் ஆண்டில் விலகினார். 1912-14ஆம் ஆண்டுகளில் ஆசிரியர் பயிற்சி பெற்றார்.

1931ஆம் ஆண்டில் மருத்துவர் தருமாம்பாள் தலைமையில் உருவாக்கப்பட்ட மாணவர் மன்றப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

1938ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் ஈடுபட்ட தொண்டர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தார்.

மருத்துவர் தருமாம்பாள் தலைவராக இருந்த தாய்மார்கள் கழகத்தில் திருக்குறள் தொடர் வகுப்புகளை நடத்தினார்.

1957ஆம் ஆண்டில் மருத்துவர் தருமாம்பாள் மறைவுக்குப் பிறகு மயிலை சிவ. முத்து மாணவர் மன்றத்தின் தலைவர் ஆனார். அப்பொழுது, நாளடைவில் சென்னையில் வாழ்ந்த மாணவர்களிடையே கலை நலமும், கல்வி வளமும் பெருகக் கலைப்போட்டிகளை நடத்தினார். உயர்நிலைப் பள்ளி முதல் கல்லூரி வரை பயின்ற மாணவர்களுக்கு முன் மாதிரித் தமிழ்த் தேர்வுகளை மாநில அளவில் நடத்தினார்.

1961ஆம் ஆண்டில் மாணவர் மன்றத்தின் சார்பில் நித்திலக்குவியல் என்னும் இதழைத் தொடங்கினார். அவ்விதழின் ஆசிரியராக இருந்தார். மாணவர் மன்றத்திற்கென சொந்தக் கட்டிடம் கட்டினார். அம்மன்றத்தின்

சார்பில் 1963ஆம் ஆண்டில் தொடக்கப்பள்ளி ஒன்றைத் தொடங்கி நடத்தினார்.எண்ணற்ற இலக்கியம் படைத்த இலக்கியச் செம்மல்,1968 – சூலை 6ஆம் நாள் சென்னையில் இயற்கை எய்தினார்.

படைப்புகள்

என் இளமைப் பருவம்

தமிழ்த் திருமண முறை

சிவஞானம்; மாணவர் மன்றம், சென்னை.

தங்கநாணயம்; மாணவர் மன்றம், சென்னை.

தமிழ்நெறிக்காவலர்; மாணவர் மன்றம், சென்னை.

திருக்குறள் – எளிய உரை

நல்ல எறும்பு; மாணவர் மன்றம், சென்னை.

நித்திலக்கட்டுரைகள்; மாணவர் மன்றம், சென்னை.

நித்தில வாசகம்

முத்துக்கட்டுரைகள்; மாணவர் மன்றம், சென்னை.

முத்துப்பாடல்கள் (இந்திய ஒன்றிய அரசின் பரிசைப் பெற்றது)

வரதன்; மாணவர் மன்றம், சென்னை.

(😊)(😊) @@@@@ (😊)(😊)

மயிலை சிவமுத்து (1892-1968) என்பவர் ஒரு சிறந்த தமிழறிஞர், பேராசிரியர், குழந்தைக் கவிஞர் மற்றும் சமூகத் தொண்டர் ஆவார். இவர் "தமிழர் திருமணம்" என்னும் கருத்தாக்கத்தை உருவாக்கி பரப்பியவர். சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்த இவர், மாணவர் மன்றத் தலைவராகவும், பல சிறுவர் நூல்கள் மற்றும் பாடல்களை எழுதிய எழுத்தாளராகவும் புகழ்பெற்றவர்.

முக்கிய தகவல்கள்:

- ***இயற்பெயர்:*** *சிவானந்த முத்துக்குமாரசாமி.*
- ***பிறப்பு:*** *ஜனவரி* 15, 1892.
- ***பணி:*** *தமிழாசிரியர், பேராசிரியர்.*
- ***படைப்புகள்:*** *முத்துப்பாடல்கள், தமிழர் திருமண முறை, எங்கள் பாப்பா (சிறுவர் பாடல்கள்), வரதன் அல்லது வழிதப்பிய சிறுவன்.*
- ***சிறப்பு:*** *தமிழ் நெறிக்காவலர் என்று போற்றப்படுபவர்.*

மயிலை சிவமுத்துவின் படைப்புகள் தமிழ்நாடு அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. இவர் எழுதிய சிறுவர் பாடல்கள் மிகவும் பிரபலமானவை.




2010 ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் நாளில், இவரது படைப்புகளை, நாட்டுடைமை நூற்பட்டியலில் இணைத்தற்கான, தமிழ்நாடு அரசு அறிவித்த ஆணை

தமிழ் இணையக் கல்விக்கழகம்
தமிழ் வளர்ச்சித் துறை

https://tamildigitallibrary.in/nationalisedbooks/author-detail/111

மயிலை சிவமுத்து



ஆசிரியர் பற்றிய விவரம்

ஆசிரியர் பெயர்	மயிலை சிவமுத்து
இயற்பெயர்	முத்துக்குமாரசாமி
பிறந்த ஆண்டு	1892, ஜனவரி 15
பெற்றோர்	சிவானந்தம் - விசாலாட்சி அம்மையார்
பணி	தமிழாசிரியர்
பதவிகள்	மாணவர் மன்றத் தலைவர்
குறிப்பிடத்தக்க படைப்புகள்	திருக்குறள் எளிய உரை, என் இளமைப் பருவம் முறை, முத்துக்கட்டுரைகள்
பிறந்த ஊர்	மயிலாப்பூர்
மாவட்டம்	சென்னை
மாநிலம்	தமிழ்நாடு
நாடு	இந்தியா
அரசியல் / இயக்கம்	சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சி

விருதுகள் / பட்டங்கள்	தமிழ்நெறிக் காவலர்
நாட்டுடைமை ஆண்டு	2010
இறப்பு	1968, ஜூலை 6
இறந்த ஊர்	சென்னை

நூல்கள்

மயிலை சிவ முத்து எழுதிய நூல்கள்:

- என் இளமைப் பருவம்
- தமிழ்த் திருமண முறை
- சிவஞானம்; மாணவர் மன்றம், சென்னை.
- தங்கநாணயம்; மாணவர் மன்றம், சென்னை.
- தமிழ்நெறிக்காவலர்; மாணவர் மன்றம், சென்னை.
- திருக்குறள் - எளிய உரை
- நல்ல எறும்பு; மாணவர் மன்றம், சென்னை.
- நித்திலக்கட்டுரைகள்; மாணவர் மன்றம், சென்னை.
- நித்தில வாசகம்
- முத்துக்கட்டுரைகள்; மாணவர் மன்றம், சென்னை.
- முத்துப்பாடல்கள் (இந்திய அரசின் பரிசைப் பெற்றது)
- வரதன்; மாணவர் மன்றம், சென்னை.

மயிலை சிவ முத்து

அவர்களது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

https://www.tamilvu.org/ta/library-nationalized-html-naauthor-63-235720

01.

the tamilian system of marriage

02.

தமிழ்த் திருமண முறை


மயிலை சிவமுத்து, தமிழ்த் திருமணங்கள் அயல்மொழியில் நிகழ்வதை தடுத்து தமிழில் நிகழவேண்டும் என்பதை ஒரு மரபாக நிறுவ விரும்பினார். திரு.வி.கலியாணசுந்தரனார், பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார், மணி.

திருநாவுக்கரசர் முதலியவர்களுடன் இணைந்து தமிழ் மொழியிலேயே தேவார, திருவாசகப் பாடல்களை ஓதி மணம் செய்து வைக்கும் 'தமிழ்த் திருமண முறை'யை உருவாக்கினார். அம் முறையில் மயிலை சிவ முத்து ஏராளமான திருமணங்களை நடத்தி வழிகாட்டினார். 'தமிழ்த் திருமண முறை' என்னும் நூலில் அதை விரிவாக பதிவுசெய்து சென்னை மாணவர் மன்றம் சார்பில் வெளியிட்டார்.

தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த பிரிட்டோரியா தமிழ்ச்சங்கத்தின் செயலாளர் அம்பலவாணனின் விருப்பப்படி தமிழ்த் திருமண முறையை ஆங்கிலத்தில் வல்லை. பாலசுப்பிரமணியம் மொழிபெயர்த்தார். தேவாரம், திருவாசகம் முதலிய நூற்பாடல்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இந்நூலில் இடம்பெற்றன.


கீழ்க்காணும் நூல்களை அணுக:

https://ta.wikisource.org/wiki/%E0%AE%86%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D:%E0%AE%AE%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%88_%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81/%E0%AE%A8%E0%AF%82%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B2%E0%AF%8D



https://archive.org/details/vvv_20200825_20200825




நம்நாட்டுப் பெண்மணிகள்

புத்தகம் 1


பார்வதிபாய் அம்மையார்

(உழைப்பில் சிறந்தவர்)

சென்னை முத்தியாலுபேட்டை
உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்,
மயிலை, சிவ. முத்துக்குமாரசாமி முதலியார்
எழுதியது


எஸ். வாஸன் கம்பெனி,
சமுகரங்கபுரம் : : திருநெல்வேலி ஜில்லா,
மயிலாப்பூர் : : மதராஸ்

ரிஜிஸ்தர் செய்தது] 1949 [விலை அணா 6





நல்ல குழந்தை
மாணவர் மன்ற வெளியீடு
17, இரத்தின முதலி தெரு, சென்னை-1.


நாராயணன்
மாணவர் மன்றம்,
17, இரத்தின முதலி தெரு, சென்னை-1.


நித்திலக் கட்டுரைகள்
மாணவர் மன்ற வெளியீடு
17, இரத்தின முதலி தெரு, சென்னை-1
[விலை ரூ. 2


பொன் நாணயம்
சென்னை.
1935


முத்துப் பாடல்கள்
பேராசிரியர் மயிலை சிவமுத்து


வரதன்
பேராசிரியர் மயிலை சிவமுத்து
மாணவர் மன்றம்
சென்னை-1.



தமிழ்நெறிக் காவலர்—முதுபெரும் புலவர்
பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள்

உலகப் புலவன் வள்ளுவனின்
உள்ளம் அறிந்த சிவமுத்துப்
புலவன் இனிய எளியநடை
பொலியும் இந்த உரை நூலைப்
பலரும் வாங்கி நாடோறும்
படிப்போம்; சுவைப்போம்; இன்புறுவோம்;
நலமும் வளமும் பெருகிடவே
நடப்போம் வள்ளுவர் நெறியினிலே.

—தணிகை உலகநாதன்

முவேந்தர் அச்சகம், சென்னை-600 014

தமிழ்நெறிக் காவலர்—முதுபெரும் புலவர்

பேராசிரியர் **மயிலை சிவமுத்து** அவர்கள்

உலகப் புலவன் வள்ளுவனின்
உள்ளம் அறிந்த சிவமுத்துப்
புலவன் இனிய எளியநடை
பொலியும் இந்த உரை நூலைப்
பலரும் வாங்கி நாடோறும்
படிப்போம்; சுவைப்போம்; இன்புறுவோம்;
நலமும் வளமும் பெருகிடவே
நடப்போம் வள்ளுவர் நெறியினிலே.

—தணிகை உலகநாதன்

குழந்தை இலக்கியத்தில் பாடல்கள்

சுகுமாரன்

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungalnoolagam-jan-2015/28004-2015-03-14-04-37-31

குழந்தை இலக்கியத்தில் முதன்மை இடத்தைப் பெறுவது பாடலே. அதற்குக் காரணம் இருக்கிறது. குழந்தை ஓசை இன்பத்தை விரும்புகிறது. அதைத் தரவல்லது பாடலே. தாலாட்டுப் பாடலில் இருக்கும் ஓசை இன்பத்தில் மயங்கிய குழந்தை அழுகையை நிறுத்துகிறது. தாலாட்டு குழந்தையை தூங்கவும் வைக்கிறது.

நமது தாய்மாரும் பாட்டிமாருமே குழந்தைக்கு பாட்டின் மீது ஆசையை ஏற்படுத்தியவர்கள்.

அந்த ஆசையைப் போக்கடித்தவர்கள் நமது பள்ளிக்கூட ஆசிரியர்கள்.

சோறு ஊட்டும் போதும் விளையாட்டு காட்டும் போதும் 'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு; சாயக்கிளியே சாய்ந்தாடு' என்றோ, 'கை வீசம்மா கைவீசு; கடைக்குப் போகலாம் கைவீசு' என்றோ பாட்டுப் பாடி குழந்தைக்கு பாட்டின் சுவையை உணர வைத்தார்கள்.

குழந்தைகளுக்கு படித்த கட்டுரை மறந்து விடும். கதை ஓரளவு நினைவில் நிற்கும். பாட்டோ பசுமரத்தாணி போல் மனத்தில் பதிந்துவிடுகிறது. காரணம் பாடலின் மொழி, (The language in poetry is musical, precise, memorable and magical) . அது மனதின் மொழி. ரோஜாவைப் பற்றிய பாடல் என்றால் அதில் ரோஜா தெரியக் கூடாது. ரோஜாவின் மணம் உணரப்பட வேண்டும்.

'கவி பாடலாம்' என்ற தனது நூலில் யாப்பிலக் கணத்தை பாமரருக்கும் புரியும் வகையில் விளக்கி யவர் கி. வா.ஜ. "குழந்தைகளின் உள்ளம் சொல்லின் நயத்திலும் பொருளின் சிறப்பிலும் ஈடுபடுவதில்லை. அவர்கள் மென்மையான ஒலியைத்தான் கவனிக் கிறார்கள். காதுக்கு இனிய ஒலிகளைக் கேட் கிறார்கள். அவர்கள் மொழியே ஒலியின் தொகுதி யாகத்தான் அமைகிறது' என்று குழந்தைந் பாடலின் மொழி பற்றி கி.வா.ஜ. சொல்லியுள்ளார்.

குழந்தைப் பாடல்களுக்கு பெரிய இலக்கணம் எதுவும் தேவையில்லை. வெண்பா, அகவல்களுக்கு கட்டுப்பட்டு பாடல்கள் எழுதினால் குழந்தை களுக்குப் புரியாது. ஏனென்றால் அந்த செய்யுளை இசையாகப் பாடினாலும் கட்டுக்கோப்புக்குள் அடங்காது. அதனால்தான் நான்கு நான்கு அடிகள் கொண்ட கண்ணிகளாக குழந்தைப் பாடல்கள் எழுதப்படுகின்றன.

குழந்தைப் பாடல்களுக்கு சந்தமே முக்கியம். தத்தகாரம் என்னும் ஒரு தாளக்கட்டை ஓரிடத்தில் கூட இடறாமல் கொண்டு செல்வது சந்தம். சந்தத்தில் இருக்கும் பாடலைத்தான் குழந்தைகள் தங்களுக்குச் சொந்தமானதாக நினைத்துப் பாடு கிறார்கள். 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு; அங்கே துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி' என்ற கவிமணியின் பாடல் அத்தகைய சந்தப் பாடலாகும்.

சங்க இலக்கிய காலத்திலிருந்து வெண்பா, அகவல், கலிப்பாதான், வஞ்சிப்பா முதலான பாவகைகள் இருந்தன. இப்பா வகைகளில் காவியத்தை வேகமாக பாட இயலாது என்பதால் விருத்தப்பா என்கின்ற வகையை சீவக சிந்தாமணி பாடிய திருத்தக்க தேவர் கையாண்டார். அதன் பிறகு பெரிய புராணம். கம்பராமாயணம், வில்லி பாரதம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவை விருத்தப் பாக்களால் பாடப்பட்டது.



19-ஆம் நூற்றாண்டில்தான் பாமர மக்களுக்கும் ஏற்றவாறு நொண்டிச் சிந்து, குற்றாலக் குறவஞ்சி முதலானவை இசையோடு கலந்த பாடல்களாக பாடப்பட்டன. அவற்றை அடியொட்டிதான் குழந்தைப் பாடல்கள் உருவாயின. ஒவ்வோர் அடியிலும் அளவொத்த சீர்கள் அமைய வேண்டும் என்பதே குழந்தைப் பாடலின் பொதுவான விதி. வரிக்கு மூன்று அல்லது நான்கு சீர்கள் கொண்ட நான்கு அடிகளால் எழுதப்படும் குழந்தைப் பாடல்களே அதிகம் உள்ளன. பெரும்பாலும் குழந்தைக் கவிஞர்கள் கவிமணி, அழ.

வள்ளியப்பா பாடல்களை பின்பற்றியே எழுதி விடுகின்றனர். எளிய சொற்கள், இனிய சந்தம், தெளிவான பொருள். நல்ல கற்பனை, சிறந்த உணர்ச்சி இவை களைக் கொண்ட பாடல்களே நல்ல குழந்தைப் பாடல்கள் என்று சொல்லி விடலாம். (Poetry is the language of the imagination of feelings of emotional self exáession. of high art).

நாட்டுப் புறப்பாடல்கள் இலக்கணங்களுக்கு அடைபடாதது. காட்டுப் பூக்களைப் போல் மலர்ந்து மணம் வீசுபவை அவை. குழந்தைகளுக் கான நாட்டுப்புறப் பாடல்களை பிரசவித்தவர் களாக அநேகமாக தாய்மாரும் பாட்டிமாருமாகத் தான் இருக்கக்கூடும். 'நிலா. நிலா ஓடி வா; நில்லாமல் ஓடி வா' என்று தன் செல்ல மகளுக்காக தாய்தானே பாடி அழைக்க முடியும்.

'காக்கா, காக்கா

கண்ணுக்கு மை கொண்டு வா!

குருவி, குருவி

கொண்டைக்குப் பூக் கொண்டு வா!

கொக்கே, கொக்கே

குழந்தைக்குப் பால் கொண்டு வா!'

என்று தன் ஆருயிர் பேத்திக்கு பாட்டி தானே பாடி பறவைகளைக் கூப்பிட முடியும்.

'ஆனை ஆனை அழகர் ஆனை;

அழகரும் சொக்கரும் ஏறும் ஆனை,'

போன்ற நாட்டுப்புறப் பாடல்களை குழந்தைகள் அதிகம் விரும்புகின்றனர். குழந்தை களுக்கான நாடோடிப் பாடல்களை முதன் முதலில் தொகுத்து வெளியிட்ட பெருமை 'வானொலி அண்ணா' ர. அய்யாசாமி அவர்களையேச் சாரும்.

தமிழில் தொகுக்கப்படாத நாட்டுப்புறப் பாடல்கள் இன்னும் நிறைய இருக்கின்றன என்பதே உண்மை. குழந்தைகளுக்கான நாட்டுப்புறப்பாடல் களில் விளையாட்டின் போது பயன்படுத்தப்படும் பாடல்கள் ஒரு வகையாகும். ஒருவருக்கொருவர் கேலி செய்யும் பாடல்கள் சுவாரசியமானவை. கேலி செய்வதும் குழந்தைகளுக்கு ஒரு வகை விளையாட்டுதான். சடுகுடு, கண்ணாமூச்சி போன்ற பலவகை விளையாட்டுகளுக்கும் பாடல் உண்டு.

"சடுகுடு மலெயில ரெண்டானெ

தவறி விழுந்தது கௌட்டானெ

தூக்கி விட்டது இளவட்டம்

இளவட்டம் இளவட்டம்",

என்று குழந்தைகள் சடுகுடுவை பாடி விளையாடு கிறார்கள்.

கண்ணாமூச்சி விளையாட்டில், ஒருவரின் கண்களை கட்டி விடும் குழந்தை,

"கண்ணா மூச்சி ரே ரே

காதடெச்சான் ரே ரே

ரெண்டு முட்டையெத் தின்னுப்புட்டு

மஞ்சக்காரெ முட்டெயெ

புடிச்சுட்டு வா"

என்று பாடுகிறார்.

தங்கள் உறவினர்களை நண்பர்களை குழந்தைகள் கேலி செய்து பாடும் பாடல்கள் படைப்புத் திறன் வாய்ந்தவை.

ஒரு பேரன் தன் பாட்டியை இப்படி கேலி செய்து பாடுகிறான்.

"பாட்டி பாட்டி

பளயரிசியெ தீட்டி

கோணக்கொலெ நீட்டி

கும்மியடி பாட்டி"

தன் தோழியை சிறுமி ஒருத்தி இப்படி கேலி செய் கிறாள்.

"கத்தரிக்கா சொத்தெ

கடலோரம் மெத்தெ

ஏண்டி சரோஜா

எப்ப கல்யாணம்

நேத்து மத்தியானம்"

சிறுவர்களுக்குப் பல் விழுவதை கேலி செய்யும் பாடல் இது.

"ஓட்டப் பல்லு சங்கரா

ஒரு வீட்டுக்கும் போகாதெ

அப்பம் வாங்கித் திங்காதெ

அடிபட்டுச் சாகாதெ"

குழந்தைகள் மகிழ்ச்சியான மனநிலையில் தாங்களே பாடிய பாடல்கள் இவை.

'ரோட்டு மேலே காரு,

காருக்குள்ளே யாரு,

எங்க மாமா நேரு,'

என்று ஒரு விஷயத்திற்கு எளிமையாக பாட்டு கட்டும் திறமையும் எசப்பாட்டு பாடும் வல்லமையும் குழந்தைகளுக்கு இருக்கிறது. குழந்தைகளின் இந்த திறமைக்கு பள்ளிகளில் வாய்ப்பளிக்க வேண்டும். குழந்தைகளே பாடல்கள் எழுத பயிற்சிகள் மேலை நாடுகளில் தரப்படுகின்றன. Leaning to wite oetry) அதுபோல் நம் குழந்தைகளுக்கும் தரப்பட வேண்டும். இசையோடு இயைந்த வாழ்வு தமிழருக்குரியது என்று பெருமை மட்டும் பேசுகி றோம். குழந்தைகள் நல்ல பாடல்கள் பாடவும் படிக்கவும் ஆர்வம் உள்ளவர்களாக அவர்களை நாம்தான் உருவாக்க வேண்டும். (Lovers of Poetry are not born, but made through Patient and careful nurturing)

பாடப்புத்தகங்களில் இடம் பெறும் பாடல்கள் இந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்றனவா? என்று கேட்டால் திருப்தியான பதில் நம்மிடம் இல்லை. பாடப் புத்தகங்களில் இடம்பெறும் பாடல்கள் ஒரு தேடலுடன் இடம் பெறுகிறதா என்பது சந்தேகத்திற் குரியது. கவிமணி, பாரதி, அழ. வள்ளியப்பாவைத் தாண்டி பாடக் குழுவினர் செல்வதில்லை.

முன்பு பாடக்குழுலில் இடம் பெற்றவர்களான கா. நமச்சிவாய முதலியார், மயிலை சிவமுத்து, தணிகை உலகநாதன், நெல்லை ஆ. கணபதி, சௌந்தரா கைலாசம், மணி திருநாவுக்கரசர் போன்றோர் நல்ல பாடல்களைத் தந்தனர்.

“பூவே உனை படைத்தவர் ஆர்?

புதுமணம் உள்ளே நுழைத்தவர் ஆர்?

பலபல நிறங்கள் பண்ணவர் ஆர்?

பார்க்க அழகு தந்தவர் ஆர்?

உன்னைச் செய்தோன் வல்லவனே!

உலகுக்கெல்லாம் நல்லவனே!

மணி திருநாவுக்கரசர் எழுதிய இது போன்ற பாடல்கள் முன்பு பாடப் புத்தகங்களில் இடம் பெற்று குழந்தைகளைக் கவர்ந்தன.

ஆத்திசூடி, மூதுரை, நல்வழி, கொன்றை வேந்தன் போன்ற நீதிநெறிப் பாடல்கள் முதலாம் வகுப்பு முதல் பாடப்புத்தகங்களில் இடம் பெறு கிறது. இவை குழந்தைகளுக்காக எழுதப்பட்டவை அல்ல.

ஆத்திசூடி குழந்தைகளுக்கு அகர வரிசையைக் கற்பிக்கிறது என்பதோடு மனப்பாடம் செய்ய எளிமையானது என்பது உண்மை. ஆனால் இவற்றை குழந்தைப் பாடல்கள் என்று ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்பது குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் வாதமாகும். இக்கருத்தை குழந்தைகள் கலைக் களஞ்சியம் தந்த பெ. தூரனும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஒலி இயைபும் ((Rhyme)) சந்த நயமும் (Rhythm) கொண்ட பாடல்களையே குழந்தைகள் விரும்பு கிறார்கள். இவற்றை குழந்தைகள் எளிதாக பாடவும் முடியும்.

"வட்டமான தட்டு

தட்டு நிறைய லட்டு

லட்டு மொத்தம் எட்டு

எட்டில் பாதி விட்டு

எடுத்தான் மீதம் கிட்டு"

என்ற அழ. வள்ளியப்பாவின் பாடலும்,

"மாமி சுட்ட பிட்டு

மடியில் வாங்கிக் இட்டு

சீனி சர்க்கரை கிட்டு

சிறிது நெய்யும் சொட்டு

உண்டு ஏப்பம் விட்டு

ஓடி வா நீ பட்டு"

என்ற மயிலை சிவமுத்துவின் பாடலும் ஓசை நயத்திற்கு எடுத்துக்காட்டான பாடலாகும்.

ஒலிக்குறிப்புகள் குழந்தைப் பாடல்களுக்கு இனிமை சேர்க்கிறது.

"வெள்ளைப் பூனை போகுது

மியாவ்! மியாவ்! மியாவ்!

மெல்ல மெல்லப் போகுது

மியாவ்! மியாவ்! மியாவ்!

பழுப்புப் பூனை போகுது

மியாவ்! மியாவ்! மியாவ்!

பக்கம் பார்த்து போகுது

மியாவ்! மியாவ்! மியாவ்!"

இப்பாடலில் 'மியாவ்"என்ற ஒலிக் குறிப்பினை எடுத்துவிட்டால் பாடலில் உயிர் இருக்காது.

கூறியது கூறல் பெரியோர் பாடலில் குற்றமா கலாம். குழந்தைப் பாடலில் அதுவே குணமாகும்.

'பட்டம் பெரிய பட்டம்!

பறந்து செல்லும் பட்டம்!

கட்டம் போட்ட பட்டம்!

காற்றில் ஆடும் பட்டம்!

'பட்டம்' என்ற சொல் மீண்டும் மீண்டும் வருவதே குழந்தையை குதூகலப்படுத்துகிறது.

பொதுவாக குழந்தைப் பாடல்கள் இரண்டு முறைகளில் எழுதப்படுகின்றன. குழந்தையை நோக்கி பாடுவது என்பது ஒரு முறை. இதை ஆரம்பித்து வைத்தவர் நம் பாரதிதான்.

'ஓடி விளையாடு பாப்பா - நீ

ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,

கூடி விளையாடு பாப்பா - ஒரு

குழந்தையை வையாதே பாப்பா

....

பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்

'புறந் சொல்ல லாகாது பாப்பா'

என்றும் குழந்தைகளுக்கு புத்திமதிகள் சொல்லப் படுகிறது. குழந்தையை நோக்கி பாடப்படும் பாடல்கள் எல்லாம் அறிவுரைப் பாடல்கள்தான். இது தவிர்க்க முடியாதுதான். என்றாலும் குழந்தைகள் தாமே பாடுவது போல் அமையும் பாடல்களே வரவேற்கத்தக்கது.

'தோ...தோ....நாய்க்குட்டி

துள்ளி வா வா நாய்க்குட்டி'

என்றப் பாடல். எதிரே இருக்கும் நாய்க்குட்டியை குழந்தை கூப்பிடுவது போல் அமைகிறது. குழந்தை தானே பாடுவது போல் அமையும் முறையில் உள்ள பாட்டுகளில் புத்திமதி இருக்காது. ஏனென்றால் குழந்தை தனக்குத் தானே புத்திமதி சொல்லிக் கொள்ளாது அல்லவா!

இம்முறையில் அமைந்த பாடல்களில் குழந்தை களின் அனுபவம் வெளிப்படுகிறது.

'மாமரத்தில் ஏறலாம்

மாங்காயைப் பறிக்கலாம்

தென்னை மரத்தில் ஏறலாம்

தேங்காயைப் பறிக்கலாம்

புளிய மரத்தில் ஏறலாம்

புளியங்காயைப் பறிக்கலாம்

நெல்லி மரத்தில் ஏறலாம்

நெல்லிக்காயைப் பறிக்கலாம்

வாழை மரத்தில் ஏறலாம்

வழுக்கி வழுக்கி விழுகலாம்'

என்ற அழ. வள்ளியப்பாவின் பாடலில் குழந்தை வாழை மரத்தில் ஏறி வழுக்கி விழுந்த அனுபவம் பதிவாகிறது.

"பள்ளியை விட்டு வந்தேனா?

பட்டப் பகலும் மங்கினதா?

உள்ளே வீட்டில் நுழைந்தேனா?

உள்ள சுவடியை வைத்தேனா?

பிள்ளைகள் எல்லாம் வந்தாரா?

பெரிய தெருவில் சேர்ந்தோமா?

வெள்ளி நிலாவும் வந்ததே!

விளையாடும்படி சொன்னதே!"

என்ற பாரதிதாசனின் பாடல் குழந்தையின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்திய பாடலாகும்.

"கழுத்து உண்டு தலை இல்லை

கை உண்டு விரல் இல்லை

உடல் உண்டு உயிர் இல்லை"-

இது என்ன?

என்று விடுகதையை பாடலாக்கி கேட்பது நம் குழந்தைகளுக்கு கை வந்த கலை. நம் குழந்தைக் கவிஞர்களும் விடுகதைப் பாடல்களை தந்துள்ளனர்.

"கோடைக் காலம் கிடைக்கும்; ஆனால்

கோவா மாம்பழம் அல்ல!

ஓடைக்குளிர் நீர் உள்ளே உண்டு

உண்மை! இளநீர் அல்ல!

வெட்டித் தள்ள வெளியில் தோன்றும்

கொட்டும் ரத்தம் அல்ல!

தொட்டுப் பார்த்தால் வழ வழப்பு

பட்டுத் துணியும் அல்ல

விந்தைப் பொருளோ? அல்ல! நீங்கள்

விரும்பி உண்ணும் பொருளாம்!

அந்தப் பொருளை அறிந்து கொள்க!

அருமை நுங்கு அதுவே!" (திருச்சி பாரதன்)

ஆங்கிலத்தில் பொருளிலாப் பாடல்கள் (Nonsense rhymes) என்று அழைக்கப்படும் வேடிக்கைப் பாடல்கள் உள்ளன. தமிழில் நாட்டுப்புறப் பாடல் களிலேயே அத்தகைய வேடிக்கைப் பாடல்கள் உண்டு. அழ. வள்ளியப்பா, ம.இலெ. தங்கப்பா போன்றவர்கள் இத்தகைய பாடல்களை எழுதியிருக் கிறார்கள்.

"அய்யாத்துரைக்கு கல்யாணம்!

அவரவர் வீட்டிலே சாப்பாடு!

கொட்டு முழக்கு கோயிலிலேஸ்

வெற்றிலை பாக்கு கடையிலே!

சுண்ணாம்பு சூளையிலே!

வெண்டைக் காயை தின்று விட்டு

விளக்கெண்ணையில் கை கழுவி

வழுக்கு மரத்தில் ஏறியே

சறுக்கி விழுந்தான் சாமியப்பன்".

இது ஒரு நாட்டுப்புற வேடிக்கைப் பாட்டு.

தமிழ்க் குழந்தைப் பாடல்களில் புதிய புதிய சந்தங்கள் வேண்டும் என்று எப்போதும் குரல் கொடுத்து வந்தவர் தம்பி சீனிவாசன்.

"காட்டுப் பாக்கம் தாத்தாவுக்குக்
காடு போல தாடியாம்
காடு போல தாடியாம்
மாடி மேலே நிற்கும் போது
தாடி ரோடில் புரளுமாம்!"

போன்ற அவரது பாடல்கள் குழந்தைகளின் காதில் ரீங்காரம் இடும் தன்மை வாய்ந்தவை. தம்பி சீனிவாசனின் கோரிக்கைக்கு செவி மடுப்பது போல் குழந்தைப் பாடல்களில் புதிய புதிய சந்தங் களைப் புகுத்தியவர் பாவேந்தர் பாரதிதாசன்.

"பூனை வந்தது பூனை - உடன்
போனது தயிர்ப்பானை".

"என்றன் நாயின் பேர் அப்பாய் - அது
முன்றில் காக்கும் சிப்பாய்"

ஆங்கிலப் பாடல்களின் வரிகளில் ஈற்றுச் சொல்லிலே எதுமை அமையும். இந்த ஈற்றெதுகை முறையை குழந்தைப் பாடல்களில் சிறப்பாக கையாண்டவர் பாரதிதாசன் ஆவார்.

குழந்தைப் பாடல்களில் சந்தங்களைத் துள்ளச் செய்த மற்றொரு கவிஞர் தமிழ்ஒளி.

"பாடம் படியா ஒரு பையன்
பள்ளி செல்லா ஒரு பையன்
மூடன் ஆனான் முன்னாலே
மூட்டை சுமந்தான் பின்னாலே"

என்று தொடங்கும் பாடல் கல்வியின் சிறப்பை எடுத்துக் காட்டும் பாடலாகும். 'நகை வேண்டாம் பாப்பா' என்ற தமிழ்ஒளியின் பாடல் தனித்துவ மிக்கது.

குழந்தைப் பாடல்களில் தனிச் சிறப்பான இடத்தைப் பெறுவது கதைப் பாடலாகும். "நெற்பானையும் எலியும்" போன்ற மிகச் சிறந்த நான்கு கதைப் பாடல்களை தந்ததின் மூலம் கவிமணி நிலைத்தப் புகழைப் பெற்றார். கதைப் பாடல்களை அதிகமாகவும் சிறப்பாகவும் எழுதி யவர் என்ற பெருமை அழ. வள்ளியப்பாவைச் சாரும். 'ஈசாப் கதைப் பாடல்கள்' என்ற நூல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈசாப் கதைகளை பாடல் களாகக் கொண்டது. மேலும் அழ. வள்ளியப்பா இவ்வகைப் பாடல்களை ஊக்குவிக்கும் முறையில் 60 கவிஞர்களின் கதைப் பாடல்களை தொகுப்பாக கொண்டு வந்தார். இக்கதைப் பாடல்களில் சில இசை ஒலிப்பேழையாக 25 ஆண்டுகளுக்கு முன் வந்த போது குழந்தைகளின் மனதைக் கொள்ளை கொண்டன.

தமிழில் குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்புப் பாடல்களை முதன் முதலில் தந்தவர் கவிமணியே. அவரைத் தொடர்ந்து இத்துறையில் அதிக ஆக்கங்கள் வரவில்லை என்பது ஒரு குறையே.

முதல் வகுப்பு படிப்பதற்கு முந்திய நிலையில் உள்ள குழந்தைகளுக்கு மிகத் தேவையானவை மழலைப் பாடல்களாகும். ((Nursury Rhymes)ஒலிக்கு அதிகம் முக்கியத்துவம் தரும் இப்பாடல்கள் சிறிய சொற்கள், குறைந்த வரிகள் கொண்டவையாகும்.

மழலைப் பாடல்களை சிறப்பாகவும் அதிக மாகவும் எழுதியவர்கள் புலவர் இளஞ்செழியனும் குழ. கதிரேசனுமாவர். ஆலந்தூர் கோ. மோகனரங் கனும் சில பாடல்களை தந்துள்ளார்.

"பள்ளிக்குப் போவேன்

பாடம் படிப்பேன்!

துள்ளிக் குதிப்பேன்!

துணிவாய் இருப்பேன்!"

போன்ற நான்கு வரிப் பாடல்கள் குழ. கதிரேனின் நூல்களில் இடம் பெற்றுள்ளன. அவருடைய பேசும் கிளியே, தொப்பைக் கோழி, மழலைப் பூக்கள், எலி கடித்த பூனை ஆகிய நூல்களில் உள்ள மழலைப் பாடல்கள் ஒலிப் பேழைகளாகவும் வெளிவந்து புகழ் பெற்றுள்ள. கவிஞர் செல்ல கணபதியின் மழலைப் பாடல் நூல்கள் பல வண்ணப் படங்களுடன் வெளி வந்துள்ளன.

தமிழில் மழலைப் பாடல்கள் போதுமான தரத்திலும் எண்ணிக்கையிலும் இல்லை என்பதே உண்மை. இக்குறையைப் போக்க பெரிய பாடல் களை சுருக்க வடிவத்தில் மழலைப் பாடல்களாக மாற்றிக் கொள்ளலாம் என்பது கவிஞர் வெற்றிச் செழியனின் யோசனையாகும்.

மழலையரும் சிறுவரும் ஆடிப் பாடி இயங்கும் தன்மை கொண்டவர்கள். மொழியையும் உலகத் தையும் கற்றுக் கொள்ள இசையோடு பாடும் பாடல்கள் அவர்களுக்கு உதவுகின்றன. 'தலை வாரி பூச்சூடி உன்னை' போன்ற குழந்தைகளுக் கான இசைப்பாடல்களை பாரதிதாசன் எழுதி யுள்ளார். ஓரசைப் பாடல்கள், சேர்ந்திசைப் பாடல்கள். தனிப்பாடல்கள் குழந்தைகளுக்கானவை ஓரளவே உள்ளன. இங்கு திரை இசைப் பாடல் களே குழந்தைகளை அடிமைப்படுத்தியுள்ளது. பெரியவர்களுக்கே தீமை தரும் இந்த ஆபாசப் பாடல்கள் குழந்தைகளுக்கு பொருந்துமா என்ற கேள்விக்கே இடமில்லாதவை. வீட்டிலும் பள்ளியிலும் நல்ல பாடல்களை குழந்தைகளுக்கு கற்று தந்திருந்தால் சினிமா பாடலில் சூப்பர் சிங்கர்கள் உருவாகியிருக்க மாட்டார்கள். நாம் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிய பிள்ளைகள் பாடப் புத்தகங்களில் உள்ள பாடல்களைக் கூட பாட முடியாத நிலையில் இருக்கிறார்கள். நம் ஆசிரியர்கள் சுட்டுப் போட்டாலும் பாடத்

தெரியாத நிலையில் இருக்கிறார்கள். புதிதாக வந்திருக்கிற ஆசிரியர் தகுதி தேர்வில் கூட ஆசிரியருக்குப் பாடத் தெரியுமா? என்ற அக்கறை இல்லை. பாடலோடு இசையோடு இயைந்து வளர வேண்டிய தமிழ்க் குழந்தைகள் அந்த வாய்ப்பின்றி இருக்கிறார்கள். இந்நிலை மாற வேண்டும்.

தமிழ் அறிஞர் மு.வ. கட்டுரை நூல்களும் நாவல்களும் எழுதிப் புகழ் பெற்றவர். அவர் 1939ல் 'குழந்தைப் பாட்டுகள்' எழுதி வெளியிட்டார். சுமார் 75 ஆண்டுகளுக்கு முன் குழந்தை இலக்கியத்தின் மீது தமிழ்ச் சமூகத்திற்கு இருந்த அக்கறை இப்போது எங்கே போயிற்று? என்ற கேள்வியுடன் முடிக்கிறேன்.

தமிழ்த் திருமண முறை/பதிப்புரை

https://ta.wikisource.org/wiki/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%8D_%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%AE%E0%AE%A3_%E0%AE%AE%E0%AF%81%E0%AE%B1%E0%AF%88/%E0%AE%AA%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81%E0%AE%B0%E0%AF%88

தமிழ்த் திருமண முறை
ஆசிரியர் மயிலை சிவமுத்து
பதிப்புரை

பதிப்புரை

தற்போது தமிழ்நாடு பல துறைகளில் மறுமலர்ச்சி அடைந்து வருகிறது. பற்பல துறைகளில் சீர்திருத்தம் முகிழ்த்து வருகிறது. அறிவிலே புரட்சி, வாழ்க்கையிலே புரட்சி ஏற்பட்டு வருகிறது. இந்நிலை மேன்மேல் வளர வேண்டும். இத்தகைய புரட்சிகளில் ஒன்றுதான் இன்று நடைபெறும் தமிழ்த் திருமணம்.

தற்காலத்தே பேரறிஞர் அண்ணா அவர்களின் அரிய முயற்சியினால் இத்தகைய திருமணங்கள் சட்டப்படி ஏற்கத்தக்கவை என்ற நிலை ஏற் பட்டிருப்பது தமிழர்களின் பெருமிதத்துக்குரியது.

சிவமுத்தும் தமிழர் திருமணமும்

இத் திருமணம் தமிழ் நாட்டிற்குப் புதுவதன்று. பழந் தமிழர் மேற்கொண்டு வாழ்ந்த மணமுறையில் மக்கள் மனநிலைக்கு ஏற்பச் சிற்சில மாறுதல்களை அமைத்து அறிவுடைப் பெருமக்கள் பலர் கூடி ஆய்ந்தமைத்த தாகும். இம் முறையில் எண்ணற்ற தமிழ்த் திருமணங்களைச் செய்து வைத்துத் தமிழ் உணர்வு பரப்பி வந்தவர் நம் பெரும் புலவர் மயிலை சிவமுத்து அவர்கள். இந்நெறி வளர அவர் ஆற்றிய தியாகங்கள் அளவிலடங்காதன.

ஏன் சீர்திருத்தம் வேண்டும்?

மணம் என்பதற்குக் கூடுதல் என்பது பொருள். அன்பால் பிணைக்கப்பட்ட இருவர் உள்ளங்கள் ஒன்று கூடுவதையே மணம் என்று கொண்டோம். பண்டைக் காலத்தில் வாழ்ந்த தமிழ் மகனும் தமிழ் மகளும் ஒருவரை ஒருவர் நேரிற்கண்டு பழகி மன ஒற்றுமை உடையவரான பின்பே அவர்தம் பெற்றோர்கள் அவர்க்குத் திருமணம் செய்து வைப்பது வழக்கம். அத்திருமணமும் மிகச் சுருங்கிய முறையில் சிக்கனமாகவே நடைபெறும். அன்பினால் பிணைக்கப்பட்ட மணமக்கள் இருவரும் இல்லறமென்னும் நல்லறம் ஏற்று

வாழ்க்கை தொடங்குகிறார்கள் என்பதை அறிவிக்கவே மணச் சடங்குகள் நடைபெற்றன

சான்றோர்கள் வகுத்த அம்முறைகளைப் பின் பற்றிப் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் ஆயிரக் கணக்கான திருமணங்களை நடத்தி நல்வழி காட்டியுள்ளார். அம் முறைகளை அனைவரும் அறிந்து பிறர் உதவியின்றித் தாங்களே திருமணங்களை நடத்தத் துணையாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்நூலை வெளியிட விரும்பினோம்.

இந்நூலைச் செம்மையான முறையில் அச்சிடப் பேருதவியாக இருந்த புலவர்கள் திரு. த. இராமலிங்கம், தணிகை உலகநாதன் ஆகியோருக்கு மன்றத்தின் நன்றி என்றும் உரியது.

வாழ்க மணமக்கள் !

இங்ஙணம்,

கோ. வில்வபதி,
தலைவர்,
மாணவர் மன்றம், சென்னை- 1

பிறப்பும் கல்வியும்

மயிலை சிவ. முத்து 1892ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15ஆம் நாள் சென்னை மயிலாப்பூரில் வாழ்ந்த சிவானந்த முதலியாருக்கும் விசாலாட்சி அம்மையாருக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தார்.

இவர் மயிலாப்பூரில் ஏழாம் வகுப்பு வரை பயின்றார். குடும்பச் சூழ்நிலை காரணமாக அக்கல்வி தடைபட்டது. பின்னர் 1904 ஆம் ஆண்டில் எழுப்பூரில் உள்ள சென்னை கைவினைக் கல்லூரியில்

(தற்பொழுது கவின்கலைக் கல்லூரி, சென்னை) ஓவியம் கற்றச் சென்றார். தந்தையின் மறைவின் காரணமாக அக்கல்வியும் தடைபட்டது. சென்னை உயர் நீதிமன்ற அச்சகத்தில் அச்சுக் கோக்கும் பணியில் சேர்ந்தார். ஒழிந்த நேரத்தில் சிறு சிறு நூல்களைப் படித்துத் தன்னுடைய தமிழ் அறிவையும் ஆங்கில அறிவையும் வளர்த்துக்கொண்டார்.

இவர் இசைப் பாடகராக இருந்ததால் சென்னை சிவனடியார் திருக்கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார். அக்கூட்டத்தால் நிறுவப்பட்ட பால சைவ சபையில் சொற்பொழிவாற்றப் பழகினார். அங்கே தமிழறிஞர்களான ஆதிமூல முதலியார், மணி.திருநாவுக்கரசர் ஆகியவர்களின் நட்பைப் பெற்றார்.

திருநாவுக்கரசரிடம் தமிழ் பயின்று புலவர் தேர்வில் வெற்றி பெற்றார். இதனால் உயர் நீதிமன்ற அச்சகப் பணியிலிருந்து 1912ஆம் ஆண்டில் விலகினார். 1912-14ஆம் ஆண்டுகளில் ஆசிரியர் பயிற்சி பெற்றார்.

ஆற்றிய பணிகள்

1914ஆம் ஆண்டில் சென்னை கொண்டியம்பதியில் சிவனடியார் கூட்டத்தாரால் நடத்தப்பட்டு வந்த சைவ ஆரம்பப் பாடசாலையில் தலைமையாசிரியராகத் தம் பணியைத் தொடங்கினார்.

1917ஆம் ஆண்டில் மயிலை சிவ.முத்து தம் ஆசிரியரான திருநாவுக்கரசரின் விருப்பத்திற்கிணங்க முத்தியால்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணியை ஏற்றார். அங்கேயே தொடர்ந்து பணியாற்றி 1947ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

தமிழ்ப்பணி


1931ஆம் ஆண்டில் மருத்துவர் தருமாம்பாள் தலைமையில் உருவாக்கப்பட்ட மாணவர் மன்றப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

1938ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் ஈடுபட்ட தொண்டர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தார்.

மருத்துவர் தருமாம்பாள் தலைவராக இருந்த தாய்மார்கள் கழகத்தில் திருக்குறள் தொடர் வகுப்புகளை நடத்தினார்.

1957ஆம் ஆண்டில் மருத்துவர் தருமாம்பாள் மறைவுக்குப் பிறகு மயிலை சிவ. முத்து மாணவர் மன்றத்தின் தலைவர் ஆனார். அப்பொழுது, நாளடைவில் சென்னையில் வாழ்ந்த மாணவர்களிடையே கலை நலமும், கல்வி வளமும் பெருகக் கலைப்போட்டிகளை நடத்தினார். உயர்நிலைப் பள்ளி முதல் கல்லூரி வரை பயின்ற மாணவர்களுக்கு முன் மாதிரித் தமிழ்த் தேர்வுகளை மாநில அளவில் நடத்தினார்.

1961ஆம் ஆண்டில் மாணவர் மன்றத்தின் சார்பில் நித்திலக்குவியல் என்னும் இதழைத் தொடங்கினார். அவ்விதழின் ஆசிரியராக இருந்தார். மாணவர் மன்றத்திற்கென சொந்தக் கட்டிடம் கட்டினார். அம்மன்றத்தின் சார்பில் 1963ஆம் ஆண்டில் தொடக்கப்பள்ளி ஒன்றைத் தொடங்கி நடத்தினார்.



https://ta.wikisource.org/wiki/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%B1%E0%AE%B3%E0%AF%8D,_%E0%AE%87%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%AF_%E0%AE%8E%E0%AE%B3%E0%AE%BF%E0%AE%AF_%E0%AE%89%E0%AE%B0%E0%AF%88

@@@@@@@@@@@

திருக்குறள்

(இனிய எளிய உரை)

அறம் - பொருள்

உரையாசிரியர்

தமிழ்நெறிக் காவலர், முதுபெரும் புலவர்

பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள்

திருக்குறள்

(இனிய எளிய உரை)

அறம்-பொருள்

உரையாசிரியர்
தமிழ்நெறிக் காவலர், முதுபெரும் புலவர்
பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள்

வெளியீடு
மாணவர் மன்றம்
41, இப்ராகிம் தெரு, சென்னை-600 001

படைப்பு

மணிதிரு காவுக் கரசெனும் ஆசான்
துணிவுடன் எற்கே துகளறச் சொற்ற
அணிபெறு குறளின் அரும்பொருள் உரையை
பணிவுடன் அவற்கே படைத்துளம் அமைவேன்.

—சிவமுத்து

பொருளடக்கம்

@@@@@@@@@@@@@

பதிப்புரை

திருக்குறள் நெறியைத் தமிழகம் முழுவதும் பரப்புவது மன்றத்தின் தலையாய குறிக்கோள். அக் குறிக்கோள் நிறைவேற மன்றம் பலவழிகளிலும் பாடுபட்டு வருகின்றது. அம் முயற்சிகளுள்

ஒன்றாகவே திருக்குறள் இனிய எளிய உரை என்னும் இந்நூல் வெளிவருகின்றது.

தமிழ்நெறிக் காவலர் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் தம் வாழ்நாள் முழுவதையும் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர் – சிறப்பாகத் தமிழிளைஞர் முன்னேற்றத்துக்கு மாகவே செலவிட்டுப் பல துறைகளிலும் உழைத்த உத்தமர். அப்பெரியார் திருக்குறளின் பொருளை அனைவரும் உணர்ந்து கற்றுப் பயன் பெறக்கூடிய வகையில் தெளிவான எளிய நடையில் இந்த உரை நூலை இயற்றி உதவினார்கள்.

மன்றத்திற்கு முழு உரிமையுடைய இந்நூல் இப்போது ஏழாம் பதிப்பாக வெளிவருகிறது. ஆறாம் பதிப்பைப் போலவே இந்நூலும் ஓரளவு சுருங்கிய பதிப்பாகவே வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வரிய இனிய நூலினை இயற்றியருளிய தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து அவர்களை என்றென்றும் நம் நெஞ்சக் கோயிலில் வைத்து அவர் தம் நினைவைப் போற்றுவோம்.

இந்நூலின் அச்சுப்படிகளைப் பிழையறத் திருத்தி யுதவிய மன்ற ஆட்சியாளர்கள் புலவர் தணிகை உலகநாதர், மி. ச. நடேசன், ப. கி. பொன்னுசாமி, மா. இரா. வஞ்சிக்கோவன் ஆகியோருக்கு மன்றத்தின் நன்றி என்றென்றும் உரியதாகும்.

அச்சிட்டு உதவிய மூவேந்தர் அச்சகத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இந்நூலினை ஏற்றுப் போற்றுவதன் வாயிலாக மன்றத்தின் தொண்டு சிறக்க உதவுமாறு தமிழ்ப் பெருமக்களையும்–சிறப்பாக மாணவ மணிகளையும் விரும்பி வேண்டிக் கொள்கிறோம்.

மாணவர் மன்றம்,
சென்னை-600 001
14-4-1989

இங்ஙனம்,
கோ. வில்வபதி
தலைவர்.

தமிழ்த் திருமண முறை

ஆசிரியர் :

தமிழ்நெறிக் காவலர்

மயிலை சிவமுத்து

சென்னை மாணவர் மன்றம்

12, வேங்கட ஐயர் தெரு, சென்னை-1.

பதிப்புரை

தற்போது தமிழ்நாடு பல துறைகளில் மறுமலர்ச்சி அடைந்து வருகிறது. பற்பல துறைகளில் சீர்திருத்தம் முகிழ்த்து வருகிறது. அறிவிலே புரட்சி, வாழ்க்கையிலே புரட்சி ஏற்பட்டு வருகிறது. இந்நிலை மேன்மேல் வளர வேண்டும். இத்தகைய புரட்சிகளில் ஒன்றுதான் இன்று நடைபெறும் தமிழ்த் திருமணம். தற்காலத்தே பேரறிஞர் அண்ணா அவர்களின் அரிய முயற்சியினால் இத்தகைய திருமணங்கள் சட்டப்படி ஏற்கத்தக்கவை என்ற நிலை ஏற் பட்டிருப்பது தமிழர்களின் பெருமிதத்துக்குரியது.

சிவமுத்தும் தமிழர் திருமணமும்

இத் திருமணம் தமிழ் நாட்டிற்குப் புதுவதன்று. பழந் தமிழர் மேற்கொண்டு வாழ்ந்த மணமுறையில் மக்கள் மனநிலைக்கு ஏற்பச் சிற்சில மாறுதல்களை அமைத்து அறிவுடைப் பெருமக்கள் பலர் கூடி ஆய்ந்தமைத்த தாகும். இம் முறையில் எண்ணற்ற தமிழ்த் திருமணங்களைச் செய்து வைத்துத் தமிழ் உணர்வு பரப்பி வந்தவர் நம் பெரும் புலவர் மயிலை சிவமுத்து அவர்கள். இந்நெறி வளர அவர் ஆற்றிய தியாகங்கள் அளவிலடங்காதன.

ஏன் சீர்திருத்தம் வேண்டும்?

மணம் என்பதற்குக் கூடுதல் என்பது பொருள். அன்பால் பிணைக்கப்பட்ட இருவர் உள்ளங்கள் ஒன்று கூடுவதையே மணம் என்று கொண்டோம். பண்டைக் காலத்தில் வாழ்ந்த தமிழ் மகனும் தமிழ் மகளும் ஒருவரை ஒருவர் நேரிற்கண்டு பழகி மன ஒற்றுமை உடையவரான பின்பே அவர்தம் பெற்றோர்கள் அவர்க்குத் திருமணம் செய்து வைப்பது வழக்கம். அத்திருமணமும் மிகச் சுருங்கிய முறையில் சிக்கனமாகவே நடைபெறும். அன்பினால் பிணைக்கப்பட்ட மணமக்கள் இருவரும் இல்லறமென்னும் நல்லறம் ஏற்று வாழ்க்கை தொடங்குகிறார்கள் என்பதை அறிவிக்கவே மணச் சடங்குகள் நடைபெற்றன

சான்றோர்கள் வகுத்த அம்முறைகளைப் பின் பற்றிப் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் ஆயிரக் கணக்கான திருமணங்களை நடத்தி நல்வழி காட்டியுள்ளார். அம் முறைகளை அனைவரும் அறிந்து பிறர் உதவியின்றித் தாங்களே திருமணங்களை நடத்தத் துணையாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்நூலை வெளியிட விரும்பினோம்.


இந்நூலைச் செம்மையான முறையில் அச்சிடப் பேருதவியாக இருந்த புலவர்கள் திரு. த.

இராமலிங்கம், தணிகை உலகநாதன் ஆகியோருக்கு மன்றத்தின் நன்றி என்றும் உரியது.

வாழ்க மணமக்கள் !

இங்ஙணம்,

கோ. வில்வபதி,
தலைவர்,
மாணவர் மன்றம், சென்னை- 1




























காணொளிகள்

01] கண்ணகி பாடல்கள்/ **kannagi songs**
https://www.youtube.com/watch?v=MDkybIrOTy8 [2:31:37]

02] அக்குறானை ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் காவியம்

https://www.youtube.com/watch?v=uNXlQNGEO5E [24:33]

03] மாரியம்மன் கும்மி பாடல் | Devotional Songs in Tamil
https://www.youtube.com/watch?v=1JS7lz-4cpk [32:55]

04] முத்துப்பாடல்கள் : மயிலை சிவமுத்து | சிறுவர்கள் பகுதி
https://www.youtube.com/watch?v=GVJfxEXze2c [19:00]

05] மாரியம்மன் காவியம்||கொக்குவில் ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயம்
https://www.youtube.com/watch?v=8HYOmyMQqcE [22:18]

(😊)(😊) மயிலை சிவமுத்து (😊)(😊)